உ

சிவமயம்



யாழ் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்

இங்கிலாந்து மில்ரன்கீன்சை வதிவிடமாகவும் கொண்ட

உயர்திரு இராமலிங்கம் நாகநாதன் அவர்களின்


சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

19.04.2014

உ
சிவமயம்

# உயர்திரு இராமலிங்கம் நாகநாதன் அவர்கள்



மலர்வு
18.
09.
1940

உதிர்வு
19.
03.
2014

## திதி வெண்பா

ஆண்டு விஜய அமைந்த பங்குனியில்
பூண்ட அபரபக்க திரிதியையில் - மாண்பு
இராமலிங்கம் மைந்தன் நாகநாதன் ஐயன்
ஏகினான் ஈசன் கழல்

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

**திருவாசகம்**

அப்பனீ யம்மைநீ யையனு நீ
யன்புடைய மாமனுமாமியு நீ
ஒப்புடைய மாதருமொண் பொருளு நீ
யொருகுலமுஞ் சுற்றமு மோருயிரு நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ் சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்தும் நீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வனீயே

**திருவாசகம்**

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

### திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பதக் களிறே
முப்பழம் நுகரும் மூசிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாய் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தினில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயு தத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தனை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தில் உள்ளே சிவலிங்கம் காட்டிச்
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி.
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

# பட்டினத்தார் பாடல்

பிறந்த பொழுது கொண்டுவந்ததில்லைப் பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குவிக்கு மிச்செல்வம் சிவன்தந்தவென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாயறாக்கென் சொல்லுவேன் கச்சி ஏகம்பனே

கல்லாப்பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே

ஐயந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதென்று வேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றி யூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங்கற்றெடே

ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ்சதமல்லச் செல்வம் சதமல்ல தேசத்திலே
யாருட்சதமல்ல நின் தாழ் சதம் கச்சிஏகம்பனே

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே

மையாடு மைந்தரும் வாழ்வு மனையும் செந்தீ
ஐயா நின் மாயை உருவெளித் தோற்றம் அகிலத்துள்ளே
மெய்யாயிருந்து நாட் செல்லச் செல்ல வெட்டவெறும்
பொய்யார் பழங்கதையாய் மெல்ல மெல்லப் போனதுவே

வாழ்வாகவுந்தங்கள் வைப்பாகவு மறையோர் வணங்க
ஆழ்வாய்திருத்தில்லை யம்பலத்தாயுன்னை யன்றி யொன்றைத்
தாழ்வாரறியச் சடிலநஞ்சுண்டிலை யாகிலன்றே
மாழ்வார்சிலரையன்றோ தெய்வமாக வணங்குதே

நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நினைவுளதோ அகம்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமுமைந்தரும் வாழ்வுமொழிலுடம்பும்
எல்லாம் வெளி மயக்கே இறைவா கச்சிஏகம்பனே

ஓயாமல் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதி ஆயிரம் செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறரர்க்குபசாரம் செய்யார்தமை அண்டினர்கொன்
றீயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சிஏகம்பனே

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்றோடொன்றை
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின் வழி
யாட்டுவிப்பானு மொருவருண்டேதில்லை யம்பலத்தே

## அமரர் உயர்திரு இராமலிங்கம் நாகநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

### துதி

ஆறுமுகன் அருள்வேண்டி அம்பிகை துணையோடு
உணர்வுகள் உள்ளத்தை அள்ளுவதை எழுதுவதற்கு
எழிலார்ந்த வார்த்தைகளை மனமாரத் தேடியே
மங்களமாய் வடியாதோ நாகநாதனிவன் சபைதனிலே!

### ஆசிரியம்

நித்திலம் என்றிடும் கடல் சூழ் இலங்கைதனில் குளிர்ச்சியாய் மனம் மகிழ வள மரங்கள் சூழ்ந்திருக்கும் யாழ்ப்பாணம் என்னும் பெருநகரில் மங்கிடா மகிமைசேர் பக்குவ வார்த்தை பேசும் மக்கள் வாழ்க்கின்ற விவசாயப் பேரூராம் சாவகச்சேரி தன்னில் சிறப்புற வாழ்ந்திட்ட இராமலிங்கம் நல்லானுக்கும் திலகவதி மங்கைக்கும் 1940ம் ஆண்டில் புரட்டாதி மாதம் 18ம் நாளில் எழுவரில் முதல்வராய் நாகநாதனிவன் உதித்தனனே!

முதல் மகனாய் பெருமை சேர்த்து நாகநாதன் இவனோடு ஓடியே விளையாடி (இறைசேர்) பரமநாதன் சறோஜினிதேவியோடு கமலநாதனும் இரகுநாதனுடன் வரதாமணியும் கடைச்சகோதரியாய் புனிதவதியுடன் எழுவராமே....

சிறுவனாய்த் துடிப்போடு தன்அறிவு மேம்பட மழலையாய் ஐந்திலே கல்வயல் சண்முகாநந்த மகா வித்தியாலயத்தில் கல்வியைகற்று சிறப்பு மாணவனாய் பூமியில் சகோதரர் அறுவருடன் அன்பான வழிகாட்டியாயும் தாயன்பாய் அரவணைத்தும் வாழ்ந்திட்டார் என்பதில் சற்றேதும் ஐயமில்லை.....

தொழில்புரியும் வயதினிலே ஊர்காவற்றுறை கரம்பனூரில் 1958ல் கே.எஸ்.ஆர். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அமைத்து பின் 1964ம் ஆண்டில் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கிணங்க வர்த்தகத் துறைதனிலே முதன்மையாய் விளங்கி தன்னிகர் இல்லாத் தகமைகள் பொருந்திட ஆர்.பீ.என் எனும் அரிசி ஆலையதில் தந்தையும் சகோதரரும் ஆதரவாய்ச் சேர்ந்தே சாவகச்சேரியிலே பெருந்தொழில் புரிந்திட்டார். தெரியாதோர் யாருமில்லை துரையாய் வலம் வந்தார் "துரை" என்னும் செல்லப்பெயர் பெற்றார்.

இவரின் 24ம் வயதினிலே திருமணப் பேச்சுக்கள் கூடிவர உடுவில் என்ற உன்னத ஊரிலே சிவசுப்பிரமணியம் சேதாம்பாள் எனும் சிறப்பு சேர் தம்பதிகளின் புத்திரர் குலேந்திரன், புவனேந்திரன், திலோத்தமை, கலைமகள், ஜெயேந்திரன், பரமேந்திரன், கலைவாணி, கதிர்மகள் என்ற எண்மர் பிள்ளைகளில் மூத்த பெண்மகளாம் கலையருள் கூடிய நங்கை திலோத்தமையை 1964ம் ஆண்டு மாசிமாதம் 9ம் நாளிலே கரம்பிடித்து மகிழ்ந்தார். குலம் விளங்க வாழ்ந்தார்....

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற வள்ளுவன் வார்த்தையை மெய்ப்பிக்க இல்லறம் நுழைந்த இவர்களுக்கு குமுதினி, யோகினி, நிர்மலநாதன், குகநாதன், வினோதினி, பிரபாநாதன், சொரூபநாதன், கோகுலநாதன் என மழலைச் செல்வங்கள் மண்மீது உதிக்க மாண்புசேர் மணவாழ்க்கை நல்லறமாய் வாழ்ந்தார்.

பெருமையோடு நல்வாழ்க்கை நுணாவில் பகுதியிலே நல்லிசையாய் ஒலிக்க பெருங்குளத்து விநாயகர் அருள்கொண்டு குழந்தைகள் வளர்த்து கோடி சுகம் கண்டார்.

பிரான்ஸ் நாட்டினிலே நல்மங்கை மூத்தவள் குமுதினியும் மணவாழ்க்கை அமையப்பெற்று குகநாதன் கரம்சேர்த்து விபூஷன், வேர்ஜினியை பெற்றெடுக்க சின்னவள் யோகினியும் மணாளன் மனோகரனுடன் வைஷ்ணவி, பைரவி என குழந்தைகள் கொண்டாள். சந்தோஷமே வாழ்க்கையாய் வாழ்ந்து வரும் நாள்தனிலே சிரேஷ்ட புத்திரனாம் நிர்மலநாதன் பிரான்ஸ் நகரமதில் 1992ம் வருடம் விபத்து ஒன்றில் விதிகொண்டு போக புத்திர சோகம் கொண்டது மனது. நல்லவன் குகநாதன் நன்றே நந்தினியுடன் கைகோர்த்து தூரிகா, தூரிஷன், கல்விகா என மூவரைப் பெற்றெடுக்க சாவகச்சேரி போதாதென்று 1993னிலே பரந்தனூருக்கும் உம் தொழிலை சிலகாலம் பகிர்ந்து கொண்டீர்.

இளையவள் வினோதினியும் குணத்தான் குகேஷ்வரனை மணமுடித்து துஷாரிகா, துஷாரகன், ஷாரங்கன் என மூன்று செல்வங்களுடன் நல்வாழ்வு வாழ மகிழ்வு சேர் இல்வாழ்க்கை மாத்தளைப் பகுதியிலே சிலவருடம் இவருக்கு ஓடோடிப் போயிற்று.

2000ம் வருடம் சொந்த நாடாம் இலங்கை விட்டு பத்தினியோடு நோர்வே நாட்டுக்கு மகிழ்வோடு வந்து அங்கிருந்து வசிப்பிடமாம் இலண்டனை தன் மிகுதிக் காலத்திற்காய் தேர்ந்தெடுத்தாரோ?!!!

இக்காலப் பகுதியிலே பாசமாய் பிரபாநாதன் தன்னோடு திவானியை
பாகமாக்கி சியானுகி, வரூஷன் என நல்மகவு கொள்ள செல்வனாம்
சொரூபநாதனும் திருமண பந்தத்திலே சியாமாவை மணமுடித்து
தன்னியா, ஷாயின்யா என இருமகள் கொண்டான்.
குட்டிமகன் கோகுலநாதனும் அன்பு மனைவி ஆதரவும் என் நன்றாய்
மில்ரன் கீன்ஸ்-ல் வாழ்ந்த வாழ்க்கை மறக்கவும் முடியுமோ?
09.02.14ல் தன் திருமண நாளை 50 ஆண்டாய் பூர்த்தி செய்து
மக்கள். பேரர், உறவுகள் என அழைத்து ஆசிகள் பல கூறி
ஆனந்தமடைந்ததை மறக்கவும் முடியுமோ?
மக்கள் மீது மட்டுமல்ல பேரமக்கள் மீது சொல்லவே முடியாத பாசம்
வானளாவி நிற்கும், பொங்கிவரும்
அன்பு சொல்ல வார்த்தையேது?
உறவினர்கள் நண்பர்கள் என ஒரு வட்டமே இவரைச் சுற்றி
என்றுமே இருந்திருக்கும். வலம்புரிச் சங்குபோல
நடுவே இவர் இருந்து வாஞ்சையாய்ப் பேசிடும் பேச்சுக்கள் எத்தனை?
'அப்பு' என்றும் 'ஆச்சி' என்றும் அன்பாய் வாயார கூப்பிடும் அழகும்,
நாம் அழைக்கும் போதெல்லாம் 'ஓய்' என்னும் ஆசைக்குரலும்
என்றும் எம் நினைவிலே கலந்திருக்கும்.
இத்தனைக்கும் நடுவிலே சிறு சிறு வருத்தங்கள் சுகவீனங்கள்
வந்துபோகும் யாரறிவார் இவ்விரைவில் சிறுநீரகங்கள்
பழுதாகுமென்று? பத்து நாட்கள் தான் மருத்துவமனை தனிலே
அதற்கிடையில் 19.03.14ல் ஆழ்ந்து உறக்கம் கொள்ள ஆசை
கொண்டது ஏன்?
தோற்றம் 18.09.1940 என்றும் மறைவு 19.03.2014 என்றும் இடையில்
74 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து எமையெல்லாம் இங்கே
பரிதவிக்க விட்டு விட்டு இறைபதம் இனினெய வானுலகம்
எய்தினீரோ?

## மனைவி புலம்பல்

அன்பாய் ஆதரவாய் காதலித்து
நேரம் பாராது எமக்காக வாழ்ந்தவரே
துன்பம் எமக்கென்றால் துடித்துப் போவீரே
பகிர்ந்து கொண்ட பாசமெனை விட்டு ஏன் ஓடினீரோ
கண்ணுறக்கம் வரவில்லை, பசியேதும் தெரியவில்லை
பார்க்கும் இடமெலாம் உம்முகமே வருகுதையா.
50 ஆண்டுகள் ஆசையாய் உம்மோடு....
பிரியா அன்றில்போல் பாசமுடன் வாழ்ந்தவரே
பிரிய மனம் இன்று மட்டும் எப்படி வந்ததுவோ?
வெள்ளை மனம் கொண்ட என் அப்பா உங்களுக்கு
எனைவிட்டுப் போக எப்படி மனம் வந்ததுவோ?
வீரமான உம் செயல்கள்
விளையாட்டாய்ப் பல கதைகள்
பேசிய உம் அழகை எங்கு சென்று தேடிடுவேன்?
வார்த்தையிலே உமைப்பற்றி
வடித்திடவும் முடியுமோ?
எதையென்று சொல்லுவேன்
எழுந்தோடி வந்திடய்யா!!!
'பிள்ளாச்சி' என்று எனை வாயாரக் கூப்பிடும் வார்த்தை தனை இன்று நான்
எங்கு சென்று தேடுவேனோ?
அன்பான என் அப்பா
ஆறுதில்லை என மனது
ஆசையாய் அழைக்கின்றேன்
என்னிடம் நீர் வருவீரோ!!!

## பிள்ளைகள் புலம்பல்

'அப்பா' என்று ஆசையாய் நாம் அழைத்த நாட்களை என்னவென்று கூறுவோம்? பூமிக்கு வந்த நாள் முதலாய் எம்பாதம் பூமி படவிடாமல் உம்தோள்களில் சுமந்த கதை ஊர் அறியும் எம் அப்பா... அன்போடு அருகிலிருத்தி ஆசைவார்த்தை கூறி செல்லப் பெயரிட்டு அழைத்ததைச் சொல்வோமா? உணவருந்தப் போகும்போதும் மனைவி மக்கள் மட்டுமல்ல அனைவரையும் பசியாற வைக்கும் பாசத்தைச் சொல்வோமா? எங்கப்பா சென்று விட்டீர்கள் பிள்ளைகள் நாம் தேடுகின்றோம். கண்ணீரே வரவிடாமல் நீர் பார்த்துக் கொண்ட உம் பிள்ளைகளின் கண்கள் கண்ணீரோடு இருக்கிறதே உங்கள் கரம் வந்து துடைக்காதோ?

## மருமக்கள் புலம்பல்

அழைக்கின்றோம் 'மாமா' என்று – அந்த
ஆசைவார்த்தை 'ஓய்' என்று வருமே
இப்போ செவிடானதென்ன எம் புலன்கள்?
தேடியே பார்க்கின்றோம் - எம் மாமா நீங்கள்
ஓடிப் போனதேனோ?
மக்களைப் போல் எம்மை
மகிழ்வித்து வாழ்ந்தீரே மாமா
எப்பிறப்பில் இனி உமைக் காண்போம்?

## சகோதரர் புலம்பல்

அப்பா, அம்மா அடுத்த படி
எம் அண்ணன் என்றோமோ
வார்த்தை தனை பறித்து விட்டு
வானுலகம் சென்றனையோ?
நீ இருந்த கருவறைதான் எமக்கெல்லாம் கோயிலாச்சு
பொய்யாகிப் போனதென்ன இன்றோடு உன்மூச்சு
நினைவுகள் நீங்காமல் - எம்மோடு
நீளமாய் நினைவிருக்கும்
எம் அண்ணா என்றே – எம் மனது
உனக்காய் ஏங்கி நிற்கும்.....

## பெரியாத்தை புலம்பல்

அப்பா! அப்பா! அப்பா!

ஆயிரம் கோடி சொன்னாலும் அடங்காதப்பா "ஓம் என்னாச்சி"!

"பெரியாத்தையோ"? "என்னம்மா? என்ற உன் வார்த்தைகள் ஓங்கி ஒலிக்கின்ற அந்த வார்த்தைகளுக்காக நொடியும் ஏங்குகின்றேன். அப்பா உன்னை நான் எங்கு காண்பேன்.

சுலாலத்துடன் உன் சொர்க்க உறவுகளுடன் இணைந்துவிட்டாயா? எங்கள் எல்லோரையும் ஏமாத்திவிட்டா? கதியாய் சென்றுவிட்டாய் எங்களைக் கதிகலங்க வைத்துவிட்டு ஏன் இவ்வளவு அவசரம்? "சிரித்த சலிப்பற்ற உன் முகத்தைப் பார்க்க ஏங்குகின்றேன்" உன் மாசற்ற உள்ளத்தை பார்க்க ஏங்குகின்றேன். உன் இனிமையான வார்த்தைகளுக்காக ஏங்குகின்றேன். சுவையான உன் உணவுக்காக ஏங்குகின்றேன்.

இவை மட்டுமா?

என் கையைப் பிடித்து நல்லதை மட்டுமே சொல்லுவாய் நான் கைப்பிடித்தவனையும் நன்றாக மதிப்பாய் உன் கைவைத்தியம் இனி யார் சொல்லுவார் எனக்கு

"நீ கேட்டாய் என்னைக் கட்டியணைக்க" என் முன்னால் காலனவன் உன்னைக் கட்டியணைத்து விட்டான்.

கொடியவன் அந்தக் காலன் கொடியவன் அவன் நீ என்னும் என்னைக் குழந்தையாகவே நினைக்கின்றாய் அப்பா! மீண்டும் நான் உனக்கு குழந்தையாகப் பிறப்பேன் அப்பா. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நான் உன் குழந்தைதான். அன்று உன்னைக் "கட்டியணைப்பேன்" அப்பா!

உன் உயிர் உறையும்போது அத்தின உறவுகளும் உனதருகே வேதனையுடன் வெம்பி வெடித்தார்கள் அப்பா! நீ நிரந்தரமாய் உறங்கிவிட்டாய் அப்பா! நான் ஆழாத்துயரில் துடிக்கின்றேன். என்றோ ஒரு நாள் மீண்டும் சந்திப்பேன். அந்நாளை எதிர்பார்த்து இன் நாளைக் கழிக்கின்றேன்

நீ தந்த என் உறவுகளுடன்

உம் ஆத்மா சாந்தியடைய எம்மூச்சு முடியும்வரை பிரார்த்திப்போம் அப்பா! உன் ஆசீர்வாதம் எமக்கு என்றென்றும் உண்டப்பா!

"பெரியாத்தை" (மூத்த மகள்)

**குமுதினி குகநாதன்.**

# பேரப்பிள்ளைகள் புலம்பல்------------------------

## அம்மப்பா

எனக்கு அம்மப்பா என்ற முறையில் ஒருவர் தான் இருந்தார். ஆனால் அவர் மட்டுமே இருந்தால் போதும் என்றிருந்தேன். அவர் காட்டிய பாசமும் அன்பும் எத்தனையோ பேருக்குச் சமம். அவரை இப்பொழுது கடவுளாய் நான் பார்க்கின்றேன். அம்மப்பா தன் வாழ்க்கையில் சாதித்ததில் அரைவாசியை நான் சாதித்தாலே எனக்குப் பெருமையாய் இருக்கும்.

அன்புப் பேரன்
விபூசன்

## எம் அம்மப்பா

எம் அம்மப்பா மிகவும் சிறப்பும் இனிமையும் கொண்ட நல்ல மனிதர். அவர் எங்களுக்கு அன்பு காட்டிய விதம் எல்லோராலும் பேசப்படும். அம்மம்மாவின் கண்டிப்பில் அம்மப்பாவின் ஆறுதல் இருக்கும். நான் அவரைப் பிரிந்தது என் துரதிஸ்டம்.

அன்புப் பேத்தி வேர்ஜினி

## எனது அம்மப்பா

எனது அம்மப்பாவை பற்றி எழுத வார்த்தைகளே இல்லை. சில முக்கியமான பகுதிகளை எழுதுகின்றேன். நான் பல்கலைக்கழகத்தில் படிக்கும் நாட்களில் வார இறுதி விடுமுறை நாட்களில் அவர்களிடம் செல்வேன். அப்பொழுது ரயில் நிலையத்தில் என் வருகைக்காக ஒரு மணிநேரம் முன்னதாகவே வந்து காத்திருப்பார்.

அவருடைய ஆசை நாங்கள் (பேரப்பிள்ளைகள்) படித்து பட்டதாரி ஆக வேண்டும் என்பதுதான். என்னை அவர் ஒரு பட்டதாரியாக பார்த்து விட்டார். அதேபோல் எங்கள் மீது அவருடைய ஆசிகள் எப்பொழுதும் உண்டு. அவருடைய ஆசையின்படி என்னுடைய தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் எல்லோரும் படிக்க வேண்டும் என்பதுதான். அவர் எங்களுக்கு தெய்வமாக நின்று வழிகாட்டுவார்.

என்மூச்சு உள்ளவரை என் அம்மப்பாவை நான் என்றும் மறக்கமாட்டேன். எதிர்காலத்தில் அவரைப்போல நாமும் நல்ல மனிதராக வாழவேண்டும். அவர்தான் எங்கள் எல்லோருக்கும் முன்னோடி. எங்கள் அன்புத் தெய்வம்.

இப்படிக்கு அன்பான பேத்தி
**வைஷ்ணவி**

## எனது அம்மப்பா

எனது அம்மப்பா தான் எனது வீரம். ஏனெனில் நான் யாருடன் சண்டைபிடித்தாலும் அவர் எனக்கு பக்கத்தில் இருந்து என்னை கட்டி அணைப்பார். இனி என்னை அணைக்க யாரும் இல்லை. எனக்கு பிடித்த உணவுவகைகளை எனக்கு எப்பவும் ஆசையாக செய்து தருவார். அவர் தான் எனக்கு முன்னோடி. நான் பெரியவளாக வளர்ந்த பின் நான் எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு அவரைத்தான் முன்னோடியாக வைத்து வாழ்வேன்.
அம்மப்பா நீங்கள் எனக்கு தந்த சந்தோஷம் வாழ்க்கையில் நான் மறக்க மாட்டேன். நீங்கள் எனக்கு தெய்வமாக இருந்து வழிகாட்ட வேண்டும். என் மூச்சு உள்ளவரை உங்களை மறக்கமாட்டேன்.

இப்படிக்கு என்றும் அன்பு பேத்தி
**பைரவி (சிநேகா)**

## அன்பான என் அப்பப்பா

அன்பான என் அப்பப்பா சிறுவயதில் ஆரம்பித்த என் பந்தம் நோர்வே மண்ணிலும் நீடித்தது. ஏத்தனை எத்தனை குறும்புகள் செய்தோம் நானும் நீங்களும். என்னால் எப்படி மறக்க முடியும். அப்பப்பா? மீண்டும் ஒருமுறை புன்னகைச் செய்யுங்கள்.

என் அப்பப்பா.
அன்புள்ள பேத்தி
**தூரிகா**

## அப்பப்பா

அப்பப்பா – அப்பப்பா – அப்பப்பா என்னை பார்க்க நோர்வேக்கு ஒரு மாதத்தில் ஓடி ஓடி வந்தீர்கள். நாலுமாதத்தில் எனக்கு சோறு ஊட்டினீர்கள். எனக்கு கூத்து பழக்கினீர்கள். உங்களுக்கு பேரனாக இருப்பது எங்களுக்கு பெருமையாக இருக்கின்றது.

அன்றும் இன்றும் என்றும் பேரன்
**தூரிஷன்**

## அன்பான அப்பப்பா

அன்பான அப்பப்பா, அழகான அப்பப்பா நான் தமிழ் கதைப்பது தான் உங்கள் விருப்பம். நீங்கள் எனக்கு நல்ல அப்பப்பாவாக இருந்தீர்கள். இதே மாதிரி நல்ல அப்பாவையும் தந்தீர்கள். நீங்கள் சிரிக்கும் போது நல்ல வடிவாக இருக்கும். நீங்கள் நன்றாக சமைப்பீர்கள். நான் ருசித்து ருசித்து சாப்பிடுவேன். இனி அப்படி யாருடன் சாப்பிடுவேன் அப்பப்பா.

அன்புள்ள பேத்தி
**கல்விகா**

## என்னுடன் என் அம்மப்பா இருந்த கால நினைவலைகள்......

இன்னும்கூட என்னால் அம்மப்பாவின் மறைவை ஏற்கவோ, நம்பவோ முடியவில்லை. அம்மப்பா என்னுடன் கடைசியாகக் கதைக்கும் போது கூட என்னிடம் கேட்ட கேள்வி "எப்ப Results வரும்" என்பது தான். கடைசிவரை அதை அவரிடம் சொல்ல முடியவில்லை என்பது நான் வாழும்வரை எனக்கு இழப்பு மட்டுமல்ல ஒரு ஏமாற்றமும் கூட. அம்மப்பாவின் இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது என்பது உறுதியான உண்மை. அந்த அளவிற்கு அம்மப்பா தனது அன்பான உள்ளத்தாலும், அழகான புன்னகையாலும், கம்பீரமான தோற்றத்தாலும், அக்கறையான செயல்களாலும் எங்கள் மனதில் நீங்கா இடம்பிடித்து விட்டார்.

அம்மப்பாவிடம் எத்தனையோ நற்பண்புகள் உள்ளன. நேர்மை, உண்மை, தூய்மை, எளிமை எனக் கூறிக்கொண்டே போகலாம். நான் அம்மப்பாவிடம் இருந்து பல நல்ல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். அனைவரிடமும் உண்மையாக இருத்தல், மற்றவர்கள் கூறும் முன்பே அவர்களின் தேவைகளை அறிந்து கொள்ளல், எல்லோருக்கும் சாப்பாடு கொடுப்பதோடு மட்டுமன்றி அம்மப்பா எல்லோரிடமும் முதலில் கேட்கும் கேள்வியே "சாப்பிட்டீர்களா?" என்பதுதான். இவை மட்டுமன்றி அம்மப்பா சாப்பிடுவதற்கு முதல் ஒரு பிடி உணவை எடுத்து வைத்து வணங்கிவிட்டு அதன்பின்பு தான் சாப்பிடுவார்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்'
உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய வாழ்ந்தவர் எங்கள் அம்மப்பா. எல்லோருக்கும் பிடித்தவராக வாழ்வது மிகவும் கடினமான காரியம். அதை அம்மப்பா இலகுவாக வாழ்ந்து காட்டியுள்ளார். நான் என் வாழ்வில் முதன் முதலாக தனியாக இருப்பது போல் உணர்ந்ததும்,
நானும் இலண்டனில் இருந்திக்கலாம் என எண்ணியதும் கடைசி நேரத்தில் அம்மப்பாவுடன் இருக்க முடியாமல் போனபோது தான். ஆனாலும் எப்போதும் அம்மப்பா எங்கள் அனைவருக்கும் கடவுளாக இருந்து நன்மைகள் புரிவார். அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம்.
அன்புப் பேரப்பிள்ளைகள்

**துஷாரிகா (கண்ணம்மா)**
**துஷாரகன், ஷாரங்கன்**

## என்னுயிர் அப்பப்பா

ஈன்றெடுத்த அப்பா. அம்மா தூக்கி வளர்த்தாலும் எம்மை நீங்கள்
அணைப்பதற்கு ஏதும் ஈடில்லை எம் அன்பு அப்பப்பா!
பெற்றோர் எமக்களிக்கும் தண்டனை தடுத்து என்றும் மார்போடு
சேர்த்திடும் கரம் தேடும் எம்மனது
எங்கு சென்றீர் எமைவிட்டு?
எம் உயிர் அப்பப்பா
தேடியே கண்களெல்லாம் குளமாச்சு அப்பப்பா
ஓடி வரமாட்டீரா ஒரு தடவை எம்மிடத்தே?!!!
அன்பாய் உமை இங்கே பேரர் தேடுகின்றோம்
ஆசையாய் கூப்பிடுங்கோ சியானு வருஷன் என.

அன்புப் பேரர்மார்
**ஷியானுகி, வருஷன்**


## எங்கள் அப்பப்பா

எங்கள் அப்பப்பா என்றும் அன்பானவர்
எம்மை சந்தோசமாக வைத்திருப்பதற்காக எம்முடன்
சேர்ந்து விளையாடுவார். அவர் எமக்கு கடதாசியில்
பாம்பு, மயில், குருவி, விமானம் என பலபல
உருவங்களும் செய்துகாட்டி, எம்மையும் செய்ய வைப்பார்.

எம்முடன் சேர்ந்து மகாபாரதம், இராமாயணம், சிவகதைகளென
பலதும் தொலைக்காட்சியில் பார்த்தும் எமக்கு விளக்குவார்.
நாங்கள் எப்போது சென்றாலும் என்ன வேணும்? என்று கேட்டு தானே
சமைத்துப் பரிமாறுவார்.
எமக்கு ஏதேனும் சிறு உடநலக்குறைவு ஏற்பட்டால் அப்பப்பாவின்
கைமருந்து தான் எம்மை சுகப்படுத்தும்.
எல்லா வகையிலும் எம்முடன் சேர்த்து எம்மை வழிப்படுத்திய நல்ல
ஒரு வழிகாட்டியை நாம் இனி எங்கே காண்போம்.

அன்புப் பேத்திகள்
**குட்டான் (துன்னியா)**
**சக்கரக்கட்டி (ஷாயின்யா)**

# அமரர் இராமலிங்கம் நாகநாதன் அவர்களின் வம்சாவழி



# நன்றி நவிலல்

"மறவற்க மாசற்றார் கேண்மை
துறவற்கு துன்பத்துள் துப்பாயர் நட்பு"

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு
உடனே ஓடி வந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த
அனைவருக்கும், மற்றும் தொலைபேசி வாயிலாகவும்
வேறு வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
பூக்கள், பூமாலைகள், மலர் வளையங்கள் வைத்து
அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,
மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட
அன்பு உள்ளங்களுக்கும், மறைவு செய்தி கேட்ட நாளில்
இருந்து இன்றுவரை பல வழிகளிலும் உதவிகள் புரிந்த
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்,
மேலும் இன்று நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும்
கலந்து கொண்டு எமது குடும்ப தலைவரின்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும்,
மேற்படி கிரியைகளை செவ்வனே நடாத்தி தந்த
குருமார்கள், இந்நினைவு மலர் ஆக்கத்திலும்
அச்சுப்பதிவிலும் உதவிய அனைத்து
நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில்
மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

குடும்பத்தினர்.

சுபம்.

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**





Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643